திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் இதற்கு திட்டம் தீட்டப்பட்டு, நிர்வாக ஒப்புதலும் பெறப்பட்டு, பொதுப் பணித் துறைக்குச் சென்று, ஒப்பந்தம் விடுகிற நேரத்தில் ஆட்சி கலைக்கப்பட்ட காரணத்தால் இது தடுத்து நிறுத்தப் பட்டது. எனவே, இதை மீண்டும் அதிகாரிகளை வைத்து அந்த ஒப்பந்தத்தை சீர் செய்வதற்கு, இது போன்று தாமதம் ஏற்படாமல் செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் காலத்தில் தீட்டிய எத்தனையோ திட்டங் களை இடையில் விட்டு விட்டார்கள். அப்படி விட்டு விட்ட திட்டங்களை மீண்டும் கண்டெடுத்து, நடைமுறைப்படுத்து வதில் இந்த அரசு முனைப்பாக இருக்கிறது.

சிறுபத்தூர் ஏரிக்குத் தண்ணீர்

*3318—திரு. எம். தங்கவேல் :

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம் அருகில் உள்ள சிறுபத்தூர் ஏரிக்கு வாத்தலை முக்கொம்பு பகுதியிலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே,

முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம் அருகில் உள்ள சிறுபத்தூர் ஏரிக்கு வாத்தலை முக்கொம்பு பகுதியிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

தொழிற்பேட்டைக்குச் சொந்தமான நிலங்கள்

*4183—திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை புதூரில் உள்ள தொழிற் பேட்டைக்குச் சொந்தமான நிலங்கள் தனியார்களுக்கு விற்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது விற்கப்பட்டது ?

(இ) எந்த அடிப்படையில் விற்கப்பட்டது ?